மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# கண்ணதாசன் கவிதைகளோடு பண்டைய இலக்கிய பாடல்கள் ஒரு பார்வை

## Glimpse of Ancient Literary Hymns with Kannadasan Poems

யோகேஸ் பெருமாள்/ Yoges Perumal[1]
[1]Undergraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: yogesperumal24@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இந்த ஆய்வில் பண்டைய இலக்கியத்திற்கும் கண்ணதாசன் பாடல்களுக்கும் உள்ள தொடர்பினைப் பற்றி ஆராய்வது ஆகும். அதோடு இந்த பாடல்களில் இருக்கும் மரபு கவிதை வரிகளைப் பற்றி மேலும் தெரிந்துக் கொள்வது ஆகும். மேலும், பண்டைய இலக்கிய பாடல்களில் எவ்வாறான கருத்துக்களைப் பற்றி பாடப்பட்டுள்ளது என்பதையும் இந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றுள், பெண்ணியம், தலைவன் தலைவி, தோழி, இல்லற கோட்பாடு ஆகியவை குறிப்பிடத்தக்கது.

**கருச்சொற்கள்:** கண்ணதாசன் கவிதை, பண்டைய இலக்கியம், தலைவன் தலைவி, தோழி

**Abstract**

This study explores the relationship between ancient literature and Kannadasan's songs. Also, to know more about the traditional lyrics in these songs. Also, this study also mentions what kind of ideas are sung about in ancient literary songs. Among them, feminism, leader, friend, family theory is significant.

**Keywords:** Kannadasan Poetry, Ancient Literature, friendship, love relationship

**முன்னுரை**

இந்த ஆய்வில் பல மரபு கவிதைகளை முன் வைத்து எடுத்துக்காட்டுகள் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் கண்ணதாசன் பாடல்களிலும் சங்க இலக்கிய பாடல்களிலும் இந்த மரபு கவிதையின் பங்கு எவ்வாறு உள்ளது என்பதனை கண்டறிந்து அதனை விளக்குவதே இந்த ஆய்வாகும். அதோடு, இந்த ஆய்வில் உள்ளடங்கிய பெண்ணியம், தோழி, தலைவன் தலைவி போன்ற கருத்துகள் முன் வைத்து பேசப்பட்டுள்ளன.

**முந்தைய ஆய்வுகள்**

கண்ணதாசன் கவிதைகளையும் பண்டைய இலக்கியங்களைப் பற்றி ஆராயும்போதும் பலரும் ஆய்வு கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

சில்லாழி (2015) எழுதிய சங்க இலக்கிய ஆய்வுகளின் குறியீட்டு கோட்பாடுகள். இந்த ஆய்வுகட்டுரையில், சங்க இலக்கிய பாடல்களில் இடம்பெற்ற சில கோட்பாடுகளைப் பற்றி விளக்குகிறது. மகேஸ்வரி (2019) எழுதிய தமிழ்மொழியும் இலக்கிய பான்னாட்டு ஆய்விதழ் எனும் ஆய்வுகட்டுரை சங்க கால நூல்களுடன் சேர்த்துப் பண்டைய இலக்கியங்களில் உள்ள புறநானூறு, குறுந்தொகை ஆகிய நூல்களுகளில் உள்ள சிறு சிறு பகுதிகளை விளக்கும் வண்ணமாக அமைந்துள்ளது.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்குத் தேவையான நூல்களும் ஆய்வு கட்டுரைகளும் சேகரிக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறை தரவுகள் சேகரிக்கப்ப்ட்டுள்ளன. ஆகவே, தரவுகள் சேகரிக்கப்பட்டு முறையாக நிரல்படுத்தப்பட்டு இந்த ஆய்வு கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**ஆய்வுக் கண்டுபிடிப்பு**

**பெண்ணியம்**

கண்ணதாசன் கவிதைகளில் பண்டைய இலக்கியத்தின் தாக்கத்தினைப் பற்றி ஆராயப்படும்போது பெண் வாழ்க எனும் கண்ணதாசனின் கவிதை குறிப்பிடத்தக்கது ஆகும். கவிதை என்பது 'ஒருவர் தன் எண்ணத்தையோ அனுபவத்தையோ கற்பனை நயத்துடன் உணர்ச்சிபூர்வமாகச் சொல்லமைப்பில் சுருக்கமாகவும் செறிவாகவும் வெளிப்படுத்தும் வடிவம்' (பாமா பெரியசாமி, 2018). பெண் வாழ்க எனும் கவிதை பெண் ஒருவர் வாழும் முறையையும் அதற்கு ஏற்ற கோட்பாடுகளையும் பற்றி விளக்குகிறது என்று சொன்னால் அது மிகையாகது. எடுத்துக்காட்டாக, 'அச்சம், மடம், நானம், பயிற்பு ஆகிய கூறுகள் யாவும் ஒரு பெண்ணுக்கு அடிப்படையாக இருக்க வேண்டிய கோட்பாடுகள் ஆகும்'(மதி,2016).

இதே கோட்பாடுகள் நிறைந்த கூறுகளை நாம் பண்டைய இலக்கியங்களிலிருந்தும் பார்க்கலாம். எடுத்துக்காட்டு, திருக்குறளில் 90-ஆம் அதிகாரத்தில் 907-ஆம் இடத்தில் இடம்பெற்ற பெண் சார்ந்த திருக்குறளே இந்த கண்ணதாசன் எழுதிய பெண் வாழ்க எனும் கவிதைக்கு ஏற்ற சான்றாகும்.

'கத்திவழி நேர்மையாய்ப் பண்புவழி மேன்மையாய்ப்
பாரேல்லாம் வணங்க வாழ்வோம்!' (பெண் வாழ்க)

என்ற கண்ணதாசனின் வரிகள் ஒரு பெண் மனைவியாக எப்படி இருக்க வேண்டும் என்பதனை உணர்துகிறது. அதேபோல்,

'பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து' (குறள் 907)

எனும் குறளில் பெண் என்பவள் மானத்தைப் பெரிதாக கருதும்போது ஒரு பெண்ணின் கோட்பாட்டை நிவர்த்தி செய்வது போல் அமைக்கிறது. ஆகவே, கண்ணதாசனின் பெண் வாழ்க எனும் பாடல் திருக்குறளில் குறள் 907-இன் வழி மரபு கவிதை எவ்வாறு பண்டைய இலக்கியத்திலும் கண்ணதாசன் பாடல்களிலும் இருக்கிறது என்று பார்க்க முடிகிறது.

**தோழி**

கண்ணதாசன் அவர்களின் மாலை பொழுதின் மயக்கத்திலே நான் கனவு கண்டேன் தோழி என்ற கவிதை பாடலே ஆகும். இப்பாடலில் கவிஞர் தலைவி தனது தலைவனைப் பற்றியும் அவள் தலைவனைப் பற்றி கண்ட கனவுகள் பற்றியும் விளக்கும் வகையில் கவிதை வரிகள் அமைந்துள்ளன. 'களவு வாழ்விலும் கற்பு வாழ்விலும் இன்றியமையாதப் பங்கு வகிப்பவள் தோழி ஆவாள். அத்தோழியிடம் களவுக் காலத்தில் தலைவன் குறையிரந்து (வேண்டி) நிற்பதும் கற்புக் காலத்தில் பிரிவுணர்த்தி நிற்பதுமாகக் கூற்றுகள் நிகழும்.'(மனோகரன்,2016). அதன் வகையில்,

'மணமுடித்தவர் போல் அருகினிலே ஓர் வடிவு கண்டேன் தோழி
மங்கையின் கையில் குங்குமம் தந்தார் மாலையிட்டார் தோழி
வழி மறந்தேனோ வந்தவர் நெஞ்சில் சாய்ந்து விட்டேன் தோழி-அவர்
மறவேன் மறவேன் என்றார் உடனே மறந்து விட்டார் தோழி'
(மாலை பொழுதின் மயக்கத்திலே)

என்ற பாடல் வரிகள் ஒரு தலைவி தன்னுடைய தோழியைத் தவிர்த்து வேறு யாருடனும் சொல்ல முடியாது. 'தன் பெண்மையினாலும் நாணத்தாலும் தான் காதல் கொண்ட நிலையைத் தன் உயிர் போன்ற தோழியிடமும் தலைவியால் வெளிப்படையாகக் கூற இயலாது, அதேபோல் தலைவியின் பண்புகளை நன்குணர்ந்த தோழியும் அவளிடம்

வெளிப்படையாகக் கேட்க முடியாது' (புவனெஸ்வரி, 2017). அப்படிப் பார்க்கும் பொழுது பண்டைய இலக்கியமான குறுந்தொகை பாடல் 196 தோழியின் கூற்று இடம்பெற்றுள்ளது. அதாவது,

'வேம்பின் பைங்காய்என் தோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர் இனியே
பாரி பறம்பின் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய அற்றால் அன்பின் பாலே'. (குறுந்தொகை பாடல் 196)

என்ற கவிதை வரிகளில் தலைவனைப் பார்த்து தோழி, தனது தலைவி எதை கொடுத்தாலும் விருப்பி அதனை ஏற்றுக் கொள்ளும் தலைவனே, இப்பொழுது தலைவி கொடுப்பதை யாவும் சுழித்த முகத்தோடு பெற்று கொள்வது ஏன் என்று தலைவிக்கு ஆதரவாகப் பேசுகிறாள். ஆக, பண்டை இலக்கிய பாடலும் கண்ணதாசன் பாடலும் மரபுடன் கவிதைகளை அழகாகக் காட்டியுள்ளது.

**தலைவன் தலைவி**

கண்ணதாசன் கவிதைகள் என்று எடுத்துக்கொண்டாலே கண்டிப்பாகக் காதலையும் தலைவன் தலைவி அறத்தையும் கோட்பாட்டையும் சொல்வது போலும் அமைந்துள்ளது. 'தலைவி என்பவள் தனது தலைவனை முழுதும் நம்பியே வாழ்க்கையைத் தொடங்குகின்றவள். மேலும், தனது தலைவன் மீது மிகுந்த நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டவளாக இருப்பவள்'(மகேஸ்வரி, 2019). அவ்வகையில் பார்க்கும்போது, கண்ணே கலைமானே, பாரதி கண்ணம்மா, அன்புள்ள மான்விழியே போன்ற காதல் கவிதைகள் குறிப்பிடதக்கதாகும்.

'நலம் நலம்தானா முல்லை மலரே
சுகம் சுகம்தானா முத்து சுடரே
இளைய கன்னியின் இடை மெலிந்ததோ
எடுத்த எடுப்பிலே நடை தளர்ந்ததோ' (அன்புள்ள மான்விழியே)

என்ற கண்ணதாசனின் பாடல் வரிகளில் தலைவியை நினைத்து, அவள் நலம்தானா, தலைவனை காணாமல் அவளது நிலை என்ன என்று பலவாராகத் தலைவியைக் கேட்கிறார் கவிஞர். இந்த கவிதை வரிகளின் வழி தலைவனான கவிஞர் தலைவியை 'முல்லை மலரே' 'முத்து சுடரே' என்று அவளது அழகை வருணித்துப் பாடியுள்ளார் என்றே சொல்லலாம். நற்றிணை எனும் பண்டைய இலக்கிய நூலானது 'காதல், அன்பு, இல்வாழ்க்கை முதலிய அக வாழ்வு முறைகளை எடுத்தியம்புகிறது.' (முனைவர் சிவமணி, 2019). நற்றிணை காப்பியம்

ஆனது எட்டுதொகையில் ஒரு பகுதியாகும். நற்றிணையில் வரும் பாடல் 154, கண்ணதாசன் எழுதிய அன்புள்ள மான்விழியே எனும் பாடலுக்குத் தொடர்ச்சியாக எடுத்துக் கொள்ளலாம்.

'பொறிகாற் கள்ளி விரிகா யங்கவட்டுத்
தயங்க விருந்து புலம்பக் கூஉம்
அருஞ்சுர வைப்பிற் கானம்
பிரிந்துசே ணுறைதல் வல்லு வோரே' (நற்றிணை பாடல் 154)

இந்தக் கவிதை தலைவன் தலைவி பிரிவைப் பற்றி கூறுகிறது. இப்பாடல் எப்படி கண்ணதாசன் எழுதிய பாடலுக்குத் தாக்கமாக அமைய முடியும் என்று பார்க்கும்போது பண்டைய காலத்தில் காதல் கொள்ளும் தலைவனும் தலைவியும் தங்களுகுள் தொடர்புக் கொள்ள கடிதங்கள் ஏதும் இல்லை. அதோடு, பொதுவில் கோட்பாடு எனப்படுவது உலகியல், சமூகவியல் போன்றவற்றை பற்றிய அடிப்படைச் சிந்தனைகளை ஆய்வுப் பூர்வமாக முன்வைப்பவை எனப்படுகின்றது (சில்லாழி, 2021). காதல் கோட்பாடுகள் என்று பார்க்கும்போது அவற்றுள் 'பிடித்தல், அன்பு, காதல், குணம், இரக்கம், உணர்ச்சி ஆகிய அனைத்தும் அடங்கியது ஆகும் (கென்டறா செரி, 2020). 'காதல், மறுபுறம், மிகவும் ஆழ்ந்த, தீவிரமானது, மற்றும் உடல்ரீதியான நெருக்கம் மற்றும் தொடர்புக்கான வலுவான விருப்பம் ஆகியவை அடங்கும்' (ஸ்டீவன் கான்ஸ், 2021). ஆக, பண்டைய இலக்கியத்தின் தாக்கமாகக் கண்ணதாசன் பாடல்கள் அமைந்துள்ளது. இரு பாடல்களிலும் மரபோடு உண்ர்ச்சி பொங்கப் பேசப்பட்டுள்ளது.

**வாழ்க்கைக் குறிப்பு**

கண்ணதாசன் கவிதைகளில் அடுத்ததாக நாம் பார்க்கவிருப்பது வாழ்க்கை குறிப்பு பாடல்கள் யாவும் குறிப்பிட தக்கதாகும். கண்ணதாசன் கவிதைகள் கேட்பதற்கும் படிப்பதற்கும் இனிமையாக இருந்தாலும், அது வாழ்க்கைக்கு முக்கிய குறிப்புகளைத் தருகிறது. (சோனி ஜலராஜன் ராஜ் & பாலகிருஷ்ணன் முனியப்பன், 2012). இக்கவிதையின் இறுதியில் கவியரசு அவர்கள் காதலைப் பற்றி பேசினாலும், கவிதை தொடக்க முதல் இறுதிவரை வாழ்க்கையை எப்படியெல்லாம் வாழலாம் என்று கண்ணதாசன் பாடுகிறார். அதிலும்

'பார்க்க தெரிந்தால் பாதை தெரியும்,
பார்த்து நடந்தால் பயணம் தொடரும்' (வாழ நினைத்தால் வாழலாம்)

எனும் வரிகள் ஒரு வாழ்க்கைக்குத் தேவையான முழு கோட்பாட்டையும் சொல்வது போல் பொருள் வெளிப்படுகிறது. அதன் வகையில், திருவள்ளுவர் எழுதிய பல குறள்கள் வாழ்க்கையோடு தொடர்பு கொண்டவையாக அமைந்துள்ளது. அவற்றுள் குறிப்பிட தக்கது என்று பார்க்கும்போது குறள் 39-ல் திருவள்ளுவர் இதற்கு சரியான கருத்தை எழுதியுள்ளார் எனலாம். அதாவது,

‘அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழும் இல’ (குறள் 39)

எனும் குறள் வாழ்க்கையில் ஒருவர் தூய்மையான நெஞ்சுடன் நடத்தும் அறவழி வாழ்க்கையில் வருகின்ற புகழால் ஏற்படுவதே இன்பமாகும் அதற்கு மாறான வழியில் வருவது புகழும் ஆகாது, இன்பமும் ஆகாது என்று பொருள் வெளிப்படுகிறது. ஆக, ஒரு மனித வாழ்வில் கட்டாயமாக இந்த கூறுகள் யாவும் இருத்தல் வேண்டும். ஆகவே, இந்த கவிதைகள் யாவும் மரபுக்கவிதைகளாக இருந்தாலும் படித்தால் புரிந்து கொள்ளும் அளவுக்கு சுலபமாக இருக்கிறது.

**இல்லறக் கோட்பாடு**

இவர் எழுத்திய கவிதைகளில் சிலவற்று இல்லறக் கோட்பாட்டினைத் தொடுவதும் உண்டு. ‘கண்ணதாசன் இல்வாழ்க்கைக்குரிய நெறிகளுள் கற்பின் சிறப்பினையும், காதலின் உயர்வினையும் எடுத்துரைக்கிறார்’(கிருஷ்ணன், 2018). எடுத்துக்காட்டாக, வாழ நினைத்தால் வாழலாம் எனும் பாடல் வாழ்க்கை கோட்பாட்டினைக் கொண்டு அமைந்த பாடலாகும். இருப்பினும், இக்கவிதையில் கண்ணதாசன் கற்பு வாழ்வியலைப் பற்றியும் கற்பு வாழ்வில் கோட்பாட்டினைப் பற்றியும் கூறியுள்ளார். ஆக, கண்ணதாசன் அவருடைய கங்கை கரைத் தோட்டம் என்ற கவிதையில்,

‘கண்ணன் முகம் கண்ட கண்கள் மன்னன் முகம்
காண்பதில்லை
கண்ணனுக்குத் தந்த உள்ளம் இன்னொருவர் கொள்வதில்லை’
(கங்கை கரைத் தோட்டம்)

என்ற வரிகளின் மூலம் ஒருவனுக்கு ஒருத்தி எனும் கோட்பாடுத் தெளிவாக விளங்கிறது. ஆக, இந்த கவிதை வரிகளின் வழி ஒருவனுக்கு ஒருத்தி எனும் கற்பு வாழ்க்கை கோட்பாடு தெளிவாக வெளிப்பட்டுள்ளது. அதேபோல், திருவள்ளுவர் எழுதிய குறள் 46 ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அதாவது,

“அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்” (குறள் 46)

எனும் குறள் வாழ்க்கையில் ஒரு மனிதன் ஒருவனுக்கு ஒருத்தி எனும் கோட்ப்பாட்டினைக் கடைப்பிடிக்கிறான் என்று சொன்னால் அதனை விட சிறப்பும் பயனும் வேறு எதுவும் இருக்க முடியாது. இல்லற வாழ்வு என்பது ‘மனித வாழ்வில் தோன்றும் உணர்வுகளில் காதல் உணர்வும் குறிப்பிடத்தக்கது. அந்த மாண்பமைந்த இல்லற வாழ்விற்குக் கற்பே இருவரும் போற்றிப் பாதுகாக்கும் அணிகலனாகும்’(கிருஷ்ணன்,2018). ஆகவே, கண்ணதாசன்

கவிதைகள் பண்டைய இலக்கியம் காட்டும் கற்பு வாழ்க்கை கோட்பாடுகள் மரபு கவிதைகளைக் கொண்டு சிறப்பாக அமைந்துள்ளது.

## நிறைவுரை

ஆகவே, சங்க இலக்கிய காலம் தொடங்கி இன்றளவிலும் மரபு கவிதையானது தன்னுடைய நிலை மாறாது நிலைத்து நிற்கிறது. காலப்போக்கில் மக்கள் புதுக்கவிதையைத் தேர்வு செய்தாலும், மரபு கவிதையைப் போற்றிப் பாதுகாக்கும் கவிஞர்களும் இக்காலத்திலும் இருக்கிறார்கள்.

## துணைநூற்பட்டியல்


Maheswari D. (2019). INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES (Ijtlls). Retrieved from https://www.researchgate.net/publication/335701334_INTERNATIONAL_JOURNAL_OF_TAMIL_LANGUAGE_AND_LITERARY_STUDIES_Ijtlls

Saravanajothi Seetharaman. (2020). அற இலக்கியமும் திணைக்கோட்பாட்டு மரபும். Journal of Tamil Studies, 1(1), 1-10. Retrieved from https://ejournal.upsi.edu.my/index.php/JTS/article/download/3798/2448/

Sony Jalarajan Raj, & Dr. Balakrishnan Muniyappan. (2012). MUSIC, SONG LYRICS, PHILOSOPHY AND HUMAN VALUES: EXPLORING POET KANNADASAN'S CONTRIBUTIONS TO THE TAMIL COMMUNITY WORLDWIDE. Journal of Arts, Science & Commerce, 2(4), 1-12. Retrieved from https://www.researchgate.net/publication/260518101_Jalarajan_SR_and_Muniapan_B_2012_Music_Song_Lyrics_Philosophy_and_Human_Values_Exploring_Poet_Kannadasan's_Contribution_to_Tamil_Community_Worldwide_Journal_of_Arts_Science_Commerce_Researchers_World_

அந்தோணிசாமி. (2018, January 19). தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள். Retrieved from https://www.vallamai.com/?p=82873

கவியரசு-கண்ணதாசன்-கவிதைகள்-1-1.pdf. (n.d.). Retrieved from https://drive.google.com/file/d/1i-ocL4B4SZ_N6RLR7cHjuDRJnKmoUTST/view

சண்முகதாஸ். (2002). சங்க இலக்கிய ஆய்வுகள் (1st ed.). தேசிய இலக்கிய கலை பேரவை.

சில்வாழி க. (2021). சங்க இலக்கிய ஆய்வுகளில் குறியீட்டுக் கோட்பாட்டு. Retrieved from https://ejournal.um.edu.my/index.php/tamilperaivu/article/view/13827/8626

பாமா பெரியசாமி. (2018). கவிதை கற்பித்தல் எளிமைப்படுத்தும் தமிழ் திரை இசைப் பாடல்கள். Muallim Journal of Social Science and Humanity, 2(4), 1-13. Retrieved from https://www.mjsshonline.com/index.php/journal/article/view/76

மனோகரன். (2016). D01125-5.3 தலைவன். Retrieved from https://www.tamilvu.org/ta/courses-degree-d011-d0112-html-d01125l3-18756

மனோகரன். (2017, September 6). D01123-3.2 கற்பு. Retrieved from https://www.tamilvu.org/ta/courses-degree-d011-d0112-html-d01123l2-18718